*Kalanjiyam International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed quarterly academic research journal*
**ISSN: 2456-5148 (Online)**
**www.ngmtamil.in**

களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.355 Multidisciplinary International
: https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026, p624-639** | Available online at: www.tamilmanam.in
*Original Research Paper*

# சீவக சிந்தாமணியில் போர்க்கலைகள்

*War-arts in Sīvaka Cintāmaṇi*

**முனைவர் மு. தேவகி,**

உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரி,
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது), திருச்சி - 620 002.

**Dr. M. Devaki*,**

*Assistant professor, Department of Tamil, Shrimati Indira Gandhi College,*
*(Affiliated with Bharathidasan University), Tiruchirappalli-2, Tamil Nadu, India.*
***Phone: 9500429454 | Email: devaki@sigc.edu | ORCID: 0009-0002-8123-8602,***

*Article history*
Received: 20-08-2026
Revised: 20-08-2026
Accepted: 24-08-2026
**Published: 25-08-2026**
*Corresponding Author Email: *devaki@sigc.edu*

**Abstract:**
Seevaka Sinthamani stands supreme among the fully preserved epics in Tamil literature. Valour and warfare formed the core foundations of ancient Tamil life, with war being deeply intertwined with daily existence. Literary works such as Purananuru, Pathitruppathu, and Purapporul Venbamalai state that a man's valour was identified by battle scars on his chest, whereas receiving a wound on his back was deemed cowardice, leading warriors to forfeit their lives in shame. Warriors fought courageously on the battlefield, making the smile of victory a natural outcome of bravery. Countless battles were fought during the Sangam period, and numerous poets have sung about the destruction of nations and the indescribable suffering endured by the people due to war. Seevaka was a warrior highly skilled in handling weapons; his mastery in archery is celebrated through the narrative that an arrow shot from his bow returned to his hand after plucking a fruit from a mango tree. He possessed such expertise in military tactics that he was capable of instructing others, including Visayan. Warfare was regarded as five essential martial duties critical to a nation's defense and combat, all of which Seevaka mastered. Valour served as the foundation of politics during the era of Tholkappiyar, where individuals and society established their lives around bravery as their prime principle, and morality was defined by the fame earned through victory in battle. Literature and mythology, which embody imagery, cultural markers, humanism, and aesthetics in Seevaka Sinthamani, enrich the mind in a timeless manner. This research paper highlights the martial arts, warriors and their battlefield practices, and how Seevaka's skills enabled him to achieve victory in war.

**Keywords:** *Martial methods in Seevaka Sinthamani, Nochi war, Herdsmen protecting cattle, Seevaka retrieving the cattle, Seevaka waging war with elephant, cavalry, and chariot forces.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழில் முழுமையாகக் கிடைக்கும் காப்பியங்களில் ஒப்பற்றதாய்த் திகழ்வது சீவக சிந்தாமணி. பண்டைய தமிழரின் வாழ்வியல் அடிப்படைகளாக விளங்குவது வீரமும் போருமாகும். போர் அன்றாட வாழ்வியலோடு இணைந்தது. ஆண்மகனின் வீரத்தின் அடையாளமாக மார்பில் காயம் இருக்க வேண்டும்; புறமுதுகில் காயம் இருந்தால் கோழைத்தனம் என்று நாணி உயிர் நீத்தனர் என்று புறநானூறு, பதிற்றுப்பத்து, புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய நூல்கள் கூறுகின்றன. வீரர்கள் போர்க்களத்தில் வீரத்துடன் போரிட்டனர்; அதனால் வெற்றியின் புன்னகை வீரத்தின் விளைவாக அமைந்தது. சங்க காலத்தில் எண்ணற்ற போர்கள் நடைபெற்றன. போரினால் நாடுகள் அழிந்ததையும் மக்கள் சொல்ல முடியாத அளவிற்குத் துன்பமடைந்ததையும் பல புலவர்கள் பாடியுள்ளனர். சீவகன் படைக்கலன்களைக் கையாளுவதில் சிறந்த தேர்ச்சி பெற்ற வீரனாகத் திகழ்ந்தான். மாமரத்துக் கனியைப் பறித்துக் கொண்டு வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு மீண்டும் சீவகனின் கையை அடைந்தது என்று கூறுவதன் மூலம் சீவகனின் வில்வித்தைத் திறம் போற்றப்படுகிறது. போர் முறைகளை விசயன் உள்ளிட்டோர் கற்பிக்கும் அளவு அதில் தேர்ச்சியுடையவனாகத் திகழ்கின்றான். போர்த்தொழில் என்பது ஒரு நாட்டின் பாதுகாப்பிலும் போரிலும் இன்றியமையாத ஐந்து முக்கியப் போர்சார் கடமைகளாகக் கருதப்படுகிறது; இவை அனைத்தையும் அறிந்தவனாகவும் சீவகன் இருந்தான். தொல்காப்பியர் கால அரசியலுக்கு வீரமே அடிப்படையாகின்றது; அக்கால தனிமனிதனும் சமூகமும் வீரத்தை முதற்பொருளாகக் கொண்டு தங்கள் வாழ்க்கையை நிலைப்படுத்திக் கொண்டனர். பிற ஒழுக்கம் என்பது போர்வெற்றியால் உண்டாகும் புகழே பொருண்மை என்று உண்டாயிற்று. சீவக சிந்தாமணியில் படிமங்களாகவும் பண்பாட்டுப் பதிவுகளாகவும் மனிதநேயம் பற்றியும் அழகியலாகவும் அமையும் இலக்கியங்களும் புராணங்களும் காலத்தால் வெல்ல முடியாத வகையில் சிந்தை செழிக்கச் செய்பவை. போர்க்கலைகள் பற்றியும், போர் வீரர்கள் மற்றும் அவரின் செயல்முறைகள் பற்றியும், சீவகனின் திறமைகள் அவனைப் போரில் வெற்றி அடையச் செய்ததையும் இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

**முதன்மைச் சொற்கள்**

சீவக சிந்தாமணியில் போர் முறைகள்; நொச்சிப் போர்; ஆயர்கள் ஆநிரையைப் பாதுகாத்தல்; சீவகன் ஆநிரையை மீட்டு வருதல்; யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை போன்ற படைகளைக் கொண்டு சீவகன் போர் புரிதல்.

## 1. முன்னுரை

தமிழ் மொழியில் தோன்றிய ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சீவக சிந்தாமணியின் ஆசிரியர் திருத்தக்க தேவர். கற்பனை நயத்திலும் கலைத்திறத்திலும் சந்த நயத்திலும் சிறந்து விளங்கும் இந்நூல்,

முதன் முதலில் விருத்தப்பாவால் அமைந்த நூலாகும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப்பொருள்களை உடையது; தண்டியலங்காரம் கூறும் பெருங்காப்பிய இலக்கணங்கள் இதில் பொருந்தி உள்ளன. சீவகனின் வரலாற்றைக் கூறும் இந்நூல் நாமகள் இலம்பகம் முதலாக முக்தி இலம்பகம் ஈறாக பதின்மூன்று (13) இலம்பகங்களைக் கொண்டு திகழ்கின்றது. இலம்பகங்கள் யாவும் மகளிர் பெயரினையே பெற்றுள்ளன. இலக்கியச் சிறப்புமிக்க இந்நூலில் 3145 பாடல்கள் உள்ளன; இதற்கு 'மணல் நூல்' என்னும் பெயரும் உண்டு. மனிதன் தன் உள்ளத்தில் உள்ள ஆற்றலையும் திறமையையும் வெளிப்படுத்துவதே போர்க்கலைகள் ஆகும். காலத்திற்கேற்பவும் சமுதாய நிலைக்கேற்பவும் அதன் கொள்கை, குறிக்கோள், கோட்பாடுகளுக்கு ஏற்பவும் போரின் இலக்கண விளக்கம் பெறுகின்றது. 'நம் எண்ணங்களை நிறைவேற்ற வன்முறைச் செயலைத் துணைக்கொண்டு எதிரிகளை வற்புறுத்தும் அரசியல் இணைப்பின் தொடர்ச்சியே போர்' என்று பேரறிஞர் கிளாஸ்விட்ஸ் விளக்கம் தருகிறார். சீவக சிந்தாமணியில் போர்க்கலைகள் பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

## 2. ஆய்வு நோக்கம்

இலக்கியங்களும் புராணங்களும் காலத்தால் வெல்ல முடியாத வகையில் சிந்தையைச் செழிக்கச் செய்பவையாகும். சிந்தாமணியில் மனித ஆற்றல் உள்ளிட்ட போர்க்கலைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. சீவகன் கட்டியங்காரனிடமிருந்து தனது நாட்டைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கில் படைகளைத் திரட்டிப் போர் புரிந்தான். போர் தோன்றக் காரணம்; போர் முறைகள் - அவற்றுள் வெட்சிப் போர், வஞ்சிப் போர், தும்பைப் போர்; வேடர்கள் ஆயர்படையை அழித்துச் செல்லுதல்; ஆநிரையைக் காவல் புரிதல்; வேடர்கள் ஆநிரையை ஓட்டிச் செல்லுதல்; சீவகன் ஆநிரையை மீட்டு வருதல்; போருக்குச் செல்லும் முன் முருக வழிபாடு நடத்துதல்; மாமன் கோவிந்தன் படைகொடுத்து உதவுதல்; சீவகனின் வஞ்சினம்; கட்டியங்காரனின் வஞ்சினம்; வாள் ஏந்திய வீரர்கள்; நான்கு வகைப் படைகள்; போரின் உச்சநிலை; போரின்போது அமைச்சர்களுக்கும் வீரர்களுக்கும் உணவளித்தல்; போர் செய்து கட்டியங்காரனை அழித்து நாட்டைக் கைப்பற்றுதல் என்பன இக்கட்டுரையின் நோக்கில் ஆய்வு செய்யப்படுகின்றன.

## 3. ஆய்வின் பயன்

தொல்காப்பியத்தில் ஆநிரைகளைக் கவர்ந்து வரும் பொழுது அதனைப் பாதுகாத்துத் தீங்கு செய்யாமல் உணவளித்தனர் என்று குறிப்பிடப்படுகிறது. நந்தகோன் என்னும் இடையர் குலத் தலைவன், ஆநிரையை மீட்டுக் கொடுப்பவனுக்குத் தன் மகள் கோவிந்தையை மணம் முடித்துக் கொடுப்பதாக அறிவித்தான். சீவகன் தன் நண்பர்களுடன் சென்று ஆநிரையை மீட்டான்; தன் நண்பனாகிய பதுமுகனுக்கு கோவிந்தையைத் திருமணம் செய்து வைத்தான். நிரை கவர்தல் தன்னூறு தொழிலாக இருப்பினும், சிந்தாமணியில் அதை மீட்டல் மன்னுறு தொழிலாக அமைகின்றது.

ஆயத்தலைவன் நந்தகோன் சொல்லிய வழியே சீவகனின் செயல் நிகழ்கிறது. சீவகன் ஆநிரையை மீட்டு வந்த பிறகு, மாலை அணிந்த மாதர்கள் ஆயிரத்தெட்டுப் பேர் ஒன்றுகூடி எட்டு வித மங்களப் பொருள்களை ஏந்தி வந்தனர். மேலும் அவனுக்கு நெற்றிப்பட்டமும், அட்டமங்கலம் எனப்படும் இணை கயல், கண்ணாடி, சாமரம், கொடி, தோட்டி, நிறை குடம், முரசு, விளக்கு முதலிய மங்களப் பொருள்களும் கொடுத்துப் பாராட்டினர். சீவகன் கட்டியங்காரனுடன் போரிட்டுத் தனது நாட்டைக் கைப்பற்றினான்; தனது நாட்டு மக்களுக்குத் தேவையான பொருள்களைக் கொடுத்து உதவினான். வரி செலுத்துவது ஆறில் ஒரு பங்காக அறிவித்தான். இவனுடைய கொடைத்திறம், பண்புகள், அனைத்துக் கலைகளிலும் தேர்ச்சி பெற்ற நிலை, கலைமகளையும் தன் நாவில் கொண்டு அனைவரும் போற்றும் வகையில் போர்க்கலைகளை நுணுக்கத்துடன் அறிந்து துல்லியமாகச் செயல்பட்டான் என்பதை இதன்வழி அறிந்துகொள்ள முடிகிறது.

**4. போர் விளக்கம்**

ஆற்றலிலும் படைபலத்திலும் ஒத்த தன்மை உடையோரோடு போர் புரிதலே பண்டைய தமிழரின் கொள்கையாக இருந்தது. தற்காலத்தில் நிகழ்வதைப் போல் எதிர்பாராது தாக்குதல், மறைந்திருந்து தாக்குதல், அதிரடித் தாக்குதல் போன்ற முறைகளில் போர் நிகழவில்லை; மாறாகப் போர் செய்யப் போவதை அறிவித்த பின்னரே போர் செய்வது மரபாக நிலவியது. போர்ப் பண்பு என்பது மாறாத உலக இயற்கையாகும். போர் என்பது நாடுகளுக்கு இடையே வன்முறையில் ஏற்படும் மோதலாகும். உள்நாடுகளுக்கிடையே ஏற்படும் மோதலையும், வர்க்கங்களுக்கிடையே ஏற்படும் மோதலையும் முறையே உள்நாட்டுப் போர் என்றும் வர்க்கப் போர் என்றும் வகைப்படுத்தலாம். தமிழர் தம் தொழிலின் முயற்சியிலும் விளையாட்டிலும் பழக்கவழக்கங்களிலும் இயற்கைப் பண்பிலும் போர்க்குணம் படைத்தவராக விளங்கினர் என்பது சீவக சிந்தாமணி வாயிலாக அறியப்படுகின்றது.

**5. போர் தோன்றக் காரணம்**

மனிதனின் அடிப்படைத் தேவைகளாக விளங்குவன உணவு, உடை, இருப்பிடம் என்பனவாகும். ஒருவன் தன்னுடைய தேவைகளை அவனே பூர்த்தி செய்கிறான்; அவை கிட்டாத போது அவன் சார்ந்துள்ள சமூகமோ அரசோ அத்தேவைகளை நிறைவு செய்ய வேண்டும். அவ்வகையில் ஓர் அரசன் தன் நாட்டின் தேவைகளை நிறைவு செய்ய இயலாத நிலையில் நட்பு நாடுகளை நாடுகிறான். அதுவும் நிறைவேறாத சூழலில் ஓர் அரசன் பிற நாடுகளுடன் போரிட்டு அவற்றின் வளத்தைப் பறித்துத் தன்னாட்டு மக்களின் தேவைகளை நிறைவு செய்கின்றான். நாட்டு மக்களின் நலனைக் கருதிப் போர் செய்தலும், கொடைக்கான பொருளை ஈட்டுவதற்காக அரசர்களும் குறுநில மன்னர்களும் போர் செய்துள்ளதும் பழந்தமிழ் இலக்கியங்களில் காணக்கிடைக்கின்றன.

## 6. சிந்தாமணியில் போர் முறைகள்

தமிழர்களின் போர் முறைகளைத் தொல்காப்பியர் தமது புறத்திணையியலிலேயே எடுத்துரைக்கின்றார். தொல்காப்பியர் சுட்டும் போர் வகைகள் வெட்சிப் போர், வஞ்சிப் போர், தும்பைப் போர் என்பனவாகும். சங்க இலக்கியங்களும் புறப்பொருள் வெண்பாமாலையும் செயல் அடிப்படையில் இப்போர்களை வகைப்படுத்தியுள்ளன: ஆநிரை கவர்தல் (வெட்சி), வெட்சி மீட்டல் (கரந்தை), பகைநாட்டின் மீது படையெடுத்தல் (வஞ்சி), வஞ்சியை எதிர்த்தல் (காஞ்சி), மதிலை வளைத்தல் (உழிஞை), அரணைக் காத்தல் (நொச்சி), நேருக்கு நேர் மோதல் (தும்பை) என்பன அவற்றுள் சிலவாகும். தும்பைப் போரில் வெற்றி அடைந்ததற்கு அடையாளமாக வாகைப்பூ சூடுவார்கள் என்று ஐயனாரிதனார் குறிப்பிடுகின்றார். கோவிந்தையார் இலம்பகத்தில் ஆநிரை கவர்தல், மீட்டல் பற்றிய செய்திகளும், இலக்கணையார் இலம்பகத்தில் போர் பற்றிய செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

**தொல்காப்பியம் காட்டும் போர்த்திணைகளும் சீவக சிந்தாமணியும்**

| திணை | பொருள் | சிந்தாமணியில் இடம்பெறும் நிகழ்வு |
|---|---|---|
| 1 வெட்சிப் போர் | பகைநாட்டு ஆநிரை (பசுநிரை) கவர்தல் | வேடர் ஆயர் நிரையைக் கவர்ந்து செல்லுதல் |
| 2 கரந்தைப் போர் | கவரப்பட்ட ஆநிரையை மீட்டல் | சீவகன் ஆநிரையை மீட்டு வருதல் |
| 3 வஞ்சிப் போர் | பகைநாட்டின் எல்லையை வென்று விரிவாக்கல் | கட்டியங்காரன் சூழ்ச்சியால் ஏமாங்கத நாட்டைக் கைப்பற்றல் |
| 4 நொச்சிப் / தும்பைப் போர் | அரணைக் காத்தல் மற்றும் நேருக்கு நேர் மோதல் | சீவகன்-கட்டியங்காரன் இடையேயான இறுதிப் போர் |

*படம் 1: தொல்காப்பியம் காட்டும் போர்த்திணைகளும் சீவக சிந்தாமணியில் அவற்றின் இடமும்*

### *6.1 வெட்சிப் போர்*

தொல்காப்பியக் காலத்தில் நாட்டின் செல்வமாக ஆநிரைகள் கருதப்பட்டன. பகைவர் நாட்டில் உள்ள ஆநிரைகளைக் கவர்தல் வாயிலாகத் தன் நாட்டின் செல்வத்தைப் பெருக்க முடியும் என்று பண்டை வேந்தர்கள் கருதினர்.

*அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்*
*புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்*
*வெற்றி வெட்சிதானே குறிஞ்சியது புறனே*
*உட்குவரத் தோன்றும் ஈரேழு துறைத்தே*

**- தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா 56**

கட்டியங்காரன் ஏமாங்கத நாட்டின் தலைவனாக விளங்குகிறான். ஆயர்கள் காட்டில் பசுக்களை மேய்த்துக் கொண்டிருந்தபோது வேடர்கள் அவற்றைக் கவர்ந்து சென்றனர். கட்டியங்காரனின் படை ஆநிரையை மீட்க அனுப்பப்பட்டும் வேடர்களிடம் தோற்றது. இதை அறிந்த சீவகன் போர்க்களம்

சென்று, கொள்ளிக்கட்டையைச் சுற்றுவது போலும் காற்றாடி போலும் தேரை எல்லாத் திசைகளிலும் விரைவாகச் செலுத்தி வேடர் அம்புகளைத் தடுத்து அவர்களை விரட்டி, இரு பக்கத்திலும் யாருக்கும் காயமின்றி ஆநிரைகளை மீட்டு வெற்றியுடன் திரும்பினான். போரில் மீட்கப்பட்ட ஆநிரைகள் உணவு உண்டு வலிமை பெறும் நிலையையும், அவற்றைச் சார்ந்த போர்வீரர்களின் வாழ்க்கை முறையையும் புறநானூறு பின்வருமாறு சுட்டுகிறது:

*முள்கால் காரை முதுப்பழன் ஏய்ப்பத்*
*தெறிப்ப விளைந்த தீஞ் சுவை நெல்லின்*
*நிறுத்த ஆயம் தலைச்சென்று உண்டு*

**- புறநானூறு, பாடல் 258**

தமிழரின் போரியல் பண்பாட்டில் ஆநிரைக்கு இருந்த முக்கியத்துவத்தை இப்புறநானூற்றுப் பாடல் வழி அறிய முடிகிறது. ஆநிரைகளைக் கவர்ந்து வரும்பொழுது அவற்றைப் பாதுகாத்துத் தீங்கு செய்யாமல் உணவளித்து வந்த மரபையும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

### *6.2 வேடர்கள் ஆயர்படையை அழித்தல்*

ஆயர்கள் ஆநிரையைக் காவல் புரிந்தனர். அவர்களை வேடர்கள் இருபக்கமும் சூழ்ந்துகொண்டு ஆநிரைகளைக் கவர்ந்து சென்றனர் என்பதை பின்வரும் சிந்தாமணிப் பாடல் விளக்குகிறது:

*பாறை படுதயிர் பாலொடு நெய்ப்பொரு*
*தாறு படப்பள்ளி யாகுல மாக*
*மாறு படமலைந் தாய்ப்படை நெக்கது*
*சேறு படுமலர் சிந்த விரைந்தே*

**- சீவக சிந்தாமணி, கோவிந்தையார் இலம்பகம், பாடல் 426**

வேடர் படையின் தாக்குதலால் ஆயர்படை அழிவுற்றது; முல்லை மலரை நோக்கி விரைந்து சென்றது போன்ற உவமையால் இச்செய்தி விளக்கப்படுகிறது. படை தோற்றுப் போனதைக் கேட்ட கட்டியங்காரன் மிகுந்த துன்பம் அடைந்தான். வேடர்கள் ஆயர்களையும் கட்டியங்காரனின் படைகளையும் தாக்கிவிட்டு ஆநிரைகளைக் கவர்ந்து சென்றனர். யானை, குதிரை, தேர் முதலிய படைகளைக் கொண்ட வேடர் வீரர்கள் மன்னனின் படையைத் தோற்று ஓடச் செய்தனர். “குறுநில மன்னரும் காட்டகத்து வாழும் மறவரும் போர்த் தொழிலில் வேந்தரைப் பொருது புறங்காணுதல் இயல்பு” என்னும் மரபுக்கு இச்செய்தி ஒப்புமையாக அமைகிறது.

### *6.3 சீவகன் ஆநிரை மீட்டு வருதல்*

ஆநிரை மீட்டலுக்குக் குறுநில மன்னரோ காட்டகத்து வாழும் மறவரோ போர் புரிவது மரபு. வேடர்கள் கவர்ந்து சென்ற ஆநிரைகளைச் சீவகன் மீட்டு வந்தமையை பின்வரும் பாடல் விளக்குகிறது:

*ஆளற்ற மின்றி அலர்தாரவன் தோழரோடும்*

*கோளுற்ற கோவல் நிரைமீட்டன னென்று கூற*

*வாளுற்ற புண்ணும் வடிவேலெறி தற்றதேபோல்*

*நாளுற்று உலந்தான் வெகுண்டு நகரார்த்தன்றே*

**- சீவக சிந்தாமணி, கோவிந்தையார் இலம்பகம், பாடல் 455**

வேடப்படையை எதிர்க்கத் துணிந்து முன்வராத நிலையில் சீவகன் மட்டும் துணிந்து காட்டிற்குச் சென்றான். அப்பொழுது சீவகன் தீங்கின்றி வேடர்களை விரட்டிவிட்டு, இருபக்கத்தினருக்கும் காயமின்றி ஆநிரைகளை மீட்டு வந்தான். இதை அறிந்த மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தில் திளைத்தனர்.

### *6.4 முருகன் வழிபாடு*

போருக்குச் செல்லும் முன் வீரர்கள் முருகப் பெருமானை வழிபட்டுச் சென்றனர் என்பதை பின்வரும் பாடல் காட்டுகிறது:

*வண்டு முரசு நறவம் மார்ந்தவர்*

*தொண்டகப் பறை துடியொடு ஆர்த்து எழ*

*விண்டு தெய்வதம் துடியொடு ஆர்த்து எழ*

*மண்டினார் நிரை மணந்த காலையே*

**- சீவக சிந்தாமணி, கோவிந்தையார் இலம்பகம், பாடல் 418**

வேடர்கள் ஆநிரைகளைக் கவரச் செல்லும்போது மதுவை நிறையப் பருகினர்; தொண்டகப் பறைகளையும் உடுக்கையையும் ஆரவாரத்துடன் முழக்கினர். தொண்டகப் பறை குறிஞ்சி நிலத்திற்குரியது; சிந்தாமணியில் வேடர்கள் வெற்றி வேண்டி முருகனை வழிபாடு செய்தனர் என்பது புலப்படுகிறது. சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதனின் வீரத்தைக் கபிலர் போற்றும்போது, முருகப் பெருமானுக்கு இணையானவனே எனப் பாராட்டுகிறார்:

*முருகற் சீற்றத்து உருகெழு குருசில்*

**- புறநானூறு, பாடல் 16, அடி 12**

முருகனுடைய கடுஞ்சினத்தை ஒத்த சீற்றமும் போரில் எழுச்சியும் உடைய பாண்டிய நெடுஞ்செழியன் மன்னனின் வீரத்தையும் கோபத்தையும் முருகனுடன் ஒப்பிட்டு மாங்குடி மருதனார் கூறுகின்றார். தொல்காப்பியத்தில் கொற்றவையை வழிபட்டு வீரர்கள் போருக்குச் சென்றதாகக் காணப்பட்டாலும், சிந்தாமணியில் வேடர்கள் முருகப் பெருமானை வழிபட்டுப் போருக்குச் சென்றனர் என்பது சிறப்புடையதாகும்.

## 7. வஞ்சிப் போர்

வஞ்சிப் போர் என்பது தன்னுடைய நாட்டின் எல்லையை விரிவுபடுத்திக் கொள்ளும் மண்ணாசையின் காரணமாக ஒரு வேந்தன் பகைநாட்டின் மீது படையெடுத்துச் செல்லுதலாகும். வீரர்கள் வஞ்சிப் பூவைச் சூடிச் சென்றதால் இப்போருக்கு 'வஞ்சி' எனப் பெயராயிற்று.

*வஞ்சி தானே முல்லையது புறனே*

*எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்*

*அஞ்சுதக அதன்கண் தலைச்சென்று அடல் குறித்தன்று*

**- தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா 64**

தொல்காப்பியர் வஞ்சித் திணையை நாட்டின் எல்லையை விரிவுபடுத்தல் எனக் கூறுகிறார். சிந்தாமணியில் இது சற்று மாறுபட்டு அமைகின்றது: ஏமாங்கத நாட்டின் மன்னனாகச் சச்சந்தன் ஆட்சி புரிந்தான். அந்நாட்டைக் கட்டியங்காரன் கரும சூழ்ச்சியால், மண்ணாசை காரணமாக, மன்னனாக விளங்கிய சச்சந்தனைத் தன் படைகளால் வீழ்த்தி, ஏமாங்கத நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டான். இந்நிகழ்வை வஞ்சித்திணை எனக் கூறுவதைவிடச் சூழ்ச்சியினால் அரசைக் கைப்பற்றுதல் என்று கூறுவதே பொருத்தமாகும்.

### *7.1 சீவகனின் வஞ்சினங்கள்*

சிந்தாமணியில் இடம்பெறும் வஞ்சினங்கள் பெரும்பான்மையும் சீவகனைச் சுற்றியே அமைகின்றன; அவை இருபடி நிலைகள் இணைந்து வருகின்றன. ஆயர் நிரையை வேடரிடமிருந்து மீட்பதான சீவகனின் கன்னிப்போரிலேயே அவனது முதல் வஞ்சினம் இடம்பெறுகிறது:

*தன்பால் மனையாள் அயலாள் தலைக் கண்டு பின்னும்*

**- சீவக சிந்தாமணி, கோவிந்தையார் இலம்பகம், பாடல் 443**

காந்தருவதத்தை காரணமாகப் பொறாமையால் கட்டியங்காரன் ஏவிய பலரொருங்கு எழுவரை எதிர்த்துச் சீவகன் துணிந்து போர் புரியும்போது வஞ்சினம் கூறுகின்றான். மன்னரைப் புறங்கண்டு காந்தருவதத்தையைப் பெறுவேனாயின் என் பெயர் உலகில் கெடுக என்பது அவனது வஞ்சின மொழி. சமூகப் பாதுகாப்பு, தனிமனிதப் பாதுகாப்பு, அறம், நீதி முதலியன காக்கப்பட வேண்டும் எனும் நிலையில் அவனது வஞ்சினங்கள் அமைகின்றன.

### *7.2 கட்டியங்காரனின் வஞ்சினம்*

சச்சந்தன் விண்ணுலகம் சென்று அங்குள்ளோர்க்கு மன்னனாகட்டும்; பூமி எங்கும் பொன் கொழிக்க நானே இவ்வுலகை ஆள்வேன் என்று கட்டியங்காரன் கூறியதைக் கேட்ட ஒருவன், 'இக்கொடிய சொற்களைப் பொறுத்துக் கொள்பவர் வேறு யாரும் இலர்' எனக் கூறுவதை பின்வரும் பாடல் விளக்குகிறது:

*என்னலாற் பிறர்கள் யாரே இன்னவை பொறுக்கும் நீரார்*

*உன்னலார் பிறர்கள் யாரே உற்றவற்கு உறாத சூழ்வார்*

*மன்னன் போய்த் துறக்கம் மாண்டு வானவர்க்கு இறைவனாக*

*பொன்னெலாம் விளைந்த பூமி பொலிய யான் காப்பல் என்றான்*

**- சீவக சிந்தாமணி, நாமகள் இலம்பகம், பாடல் 259**

வேண்டியவர்க்குக் கேடு செய்யவல்லவர்கள் உன்னைப் போல் யார் இருக்கின்றனர் என்பதை இப்பாடல் விளக்குகின்றது.

***7.3 வாட்படை வீரர்கள்***

மதில் அரணைத் தாண்டி வரும் உழிஞை வீரர்கள் நீரரணைக் கடக்க நிகழ்த்தும் போரினை இத்துறை சுட்டுகிறது; மண்மகள் இலம்பகத்தில் இப்போர் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன:

*முடிமன்னர் எழுதரு பருதி மொய்களி*

*றுடைதிரை மாக்கல மொளிறு வாட்படை*

**- சீவக சிந்தாமணி, மண்மகள் இலம்பகம், பாடல் 2223**

முடியுடைய மன்னர்கள் கடல்மேல் எழுந்த கதிரவனாகவும், நெருங்கிய யானைகள் அக்கடலில் மிதக்கும் மரக்கலன்களாகவும், அலைகள் குதிரைகளாகவும், வீரர் ஏந்திய வாட்படைகள் அக்கடலில் சுற்றித் திரியும் சுறாமீன்களாகவும் உவமிக்கப்படுகின்றன. இரு பெரும் படைகளும் போரிட எழுந்த காட்சி இரு கடல்கள் தம்முள் மோதிக்கொண்டதைப் போல் விளங்கியதாகக் கூறப்படுகிறது.

***7.4 வீரர்களின் வலிமை கூறுதல்***

அரணைக் காவல் புரியும் நொச்சி வீரரின் திறத்தைச் சிறப்பித்தலே இத்துறையின் பொருளாகும். உழிஞை வீரர் விடுக்கும் அம்பினால் மார்பிலிருந்து குருதி பெருகும் பொழுதும் பொருட்படுத்தாத துணிவுடையவர்கள் இம்மறவர்கள்:

*எயிற்றுப்படை யாண்மையின் இடிக்கும் புலி ஒப்பார்*

*பயிற்றிய வில்வாணர் பணிக்கும் வேலலொடு வல்லார்*

**- சீவக சிந்தாமணி, மண்மகள் இலம்பகம், பாடல் 2164**

வீரர்கள் வலிமையில் பாயும் புலி போன்ற தன்மை மிக்கவர்கள். வில்லையும் வேலையும் பிறர் தம்மிடம் வந்து கற்குமாறு பயிற்சி பெற்றவர்கள். கல்வி, கேள்வி, அறிவு முதலியவற்றில் சிறந்து விளங்கினர்; தம் வேலின் வலிமையால் மதயானையின் கோபத்தையும் அடக்கும் திறன் உடையவர்களாவர்.

KALANJIYAM

### 8. நொச்சிப் போர்

பகைமன்னன் ஒருவன் படையுடன் வந்து ஒரு நாட்டின் கோட்டையை அல்லது பதியை முற்றுகையிடும்போது, அக்கோட்டைக்குள் இருக்கும் மன்னன் அதனைப் பாதுகாத்துப் போரிடுதல் நொச்சித் திணை எனப்படும். நொச்சி வீரர்கள் நொச்சிப் பூவைச் சூடிப் போரிடுவர்:

*அகத்தோன் செல்வம் அழிந்தன்று புறத்தோன்*
*வேந்தமைந்த புறத்திற்று நொச்சி*

**- தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா 12**

புறநானூற்றிலும் நொச்சித் திணை பற்றிக் காணக்கிடைக்கிறது:

*கடந்து அடு தானை மூவிரும் கூடி*
*உடன்று அனிர் ஆயினும் பறம்பு கொளற்கு அரிதே*
*முந்நூறு ஊர்த்தே தண் பறம்பு நல் நாடு*

**- புறநானூறு, பாடல் 110**

சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தர்களும் பெரும்படையுடன் ஒன்றுசேர்ந்து வந்தாலும் பறம்பு மலையைப் போரிட்டுக் கைப்பற்றுவது எளிதன்று என்றும், பாரியின் பறம்பு நாட்டின் வலிமையும் அதைப் பாதுகாக்கும் வீரமும் இப்பாடலில் விளக்கப்படுகின்றன. தேர்வீரர்கள் நொச்சிப் பூவைச் சூடி எதிர்வரும் பகைவரைத் தடுத்து நிறுத்தித் தம் மதிலைப் பாதுகாத்தலைச் சிந்தாமணியில் திருத்தக்க தேவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

*நொச்சி மாமலர் நிறத்தன நொடி வரு முந்நீர*
*நிச்சம் கூற்றினுக்கு இடுபவர் தேர்மிசை யவரே*

**- சீவக சிந்தாமணி, மண்மகள் இலம்பகம், பாடல் 2163**

நொச்சி மரங்களால் அமைந்த வேலியைக் கொண்ட 'தித்தன்' என்னும் மன்னனின் நகரம் உறந்தை ஆகும்:

*நொச்சி வேலி தித்தன் உறந்தை*

**- அகநானூறு, பாடல் 122**

நொச்சி வேலி என்பது நொச்சி மரங்களால் அமைக்கப்பட்ட பாதுகாப்பு வேலியைக் குறிக்கிறது; சோழர் மரபைச் சேர்ந்த வீர மன்னனின் சிறப்புமிக்க நகரையும் இது குறிக்கும்.

### 9. தும்பைப் போர்

இரு மன்னர்களும் தங்களுடைய வீரத்தையும் வலிமையையும் நிலைநாட்டுவதற்காக நேருக்கு நேர் போரிடுதல் தும்பைத் திணை எனப்படும்:

**https://doi.org/10.63300/kijts06022026.58**

*தும்பை தானே நெய்தலது புறனே*
*மைந்து பொருளாக வந்த வேந்தனைச்*
*சென்று தலை அழிக்கும் சிறப்பிற்று என்ப*

**- தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா 11**

வீரத்தைத் தன் முதன்மைப் பொருளாகக் கொண்டு போருக்கு வரும் மன்னனை எதிர்த்துச் சென்று போரிட்டு வெல்வதே தும்பைப் போராகும். சச்சந்தன் தன் ஆட்சிப் பொறுப்பைக் கட்டியங்காரனிடம் ஒப்படைத்தான்; இதைப் பயன்படுத்திக் கொண்டு கட்டியங்காரன் தன் படைவலிமையால் சச்சந்தனை வீழ்த்தி ஆட்சியைக் கைப்பற்றினான். மேலும் தன் படைகளைக் கொண்டு அரண்மனையை வளைத்தான்:

*பரும மத்த களிறும் மாவும் பரந்த தேரும் பண்ணி*
*திருமிக்க சேனை மூதூர்த் தெருவுதொறும் எங்கும் மீண்டி*

**- சீவக சிந்தாமணி, நாமகள் இலம்பகம், பாடல் 263**

கட்டியங்காரன் யானை, குதிரை, தேர் முதலிய படைகளை அமைத்துக் கொண்டான். வாள், வில், வேல் ஏந்திய வீரர் இராசமபுர வீதிகளிலும் பிற இடங்களிலும் திரண்டு வந்து மன்னனின் அரண்மனையைச் சூழ்ந்துகொண்டனர். இறுதியில் சச்சந்தனின் படைகளைக் கட்டியங்காரன் வென்றான்; சச்சந்தன் வீரப்போர் புரிந்து வீரமரணம் அடைந்தான். தனது வலிமையை உலகம் புகழ வேண்டும் என எண்ணிய வேந்தனை மாற்றி, அவ்வாறே எண்ணி எதிர்த்துப் பெறுவது தும்பையாகும்.




*படம் 2: சீவக சிந்தாமணியில் இடம்பெறும் நால்வகைப் படைகள் (சதுரங்கப் படை)*

### *9.1 யானைப்படை*

நால்வகைப் படைகளுள் யானைப் படையின் இயல்பையும் வீரர்களின் இயல்பையும் சிந்தாமணி பின்வருமாறு விளக்குகிறது:

*அரும்பனைத் தடக்கை, அபரகாத் திரம்*
*வாய் வால் எயிறு ஐந்தினும் கொல்வ*

**- *சீவக சிந்தாமணி*, மண்மகள் இலம்பகம், பாடல் 2154 (அடி 1-2)**

யானைகள் பனைமரம் போன்ற துதிக்கை, கால்கள், வாய், வால் ஆகிய ஐந்து உறுப்புகளால் கொல்லும் தன்மை உடையவை; கருங்கடலில் பிறந்த வெண் சங்குப் போல வெண்மையான கால் நகங்களை உடையவை. பெரிய புலி முழங்கினால் அஞ்சி ஓடி, தான் தங்கும் மலையைப் பிளக்கும் வலிமை கொண்ட நான்கு கால்கள், துதிக்கை, வால் முதலிய ஏழு உறுப்புகளும் நிலத்தில் படிய நடப்பனவாகும். நெருப்புப் பொறி பறக்கும் அஞ்சாத கண்களை உடையவை. வீரர்கள் எரியும் பெருந்தீக்கு அஞ்சாது யானைகள் மேல் ஏறி, எறிகோல் எறிதல், கூரிய வாள் ஏந்திப் போரிடல், வில் வளைத்து அம்பு செலுத்துதல் ஆகிய மூன்றிலும் குறைவில்லாத பயிற்சி பெற்றவர்கள்; வான்வழியே யானையைக் கொண்டு பறக்கக்கூடிய திறன் உடையவர்கள். பெருநெருப்பைக் கண்டும் அஞ்சாத யானை மறவர்களின் வீரச் செயலை இது எடுத்தியம்புகிறது:

*யானையுடைய படைக்காண்டல் முன் இனிதே*

**- இனியவை நாற்பது, பாடல் 4**

யானைகளைக் கொண்ட படையைப் பார்ப்பது மிகவும் இனிமையானது என்றும், அரசனுக்கு வலிமையான யானைப்படை இருப்பது பெருமைக்கும் சிறப்புக்கும் உரியது என்றும் இனியவை நாற்பது கூறுகிறது. பதிற்றுப்பத்தில் ஒரு பாட்டின் தலைப்பே 'தொழில் நவில் யானை' என்பதாகும். போர்த்தொழில் நன்கு பயின்ற யானைகள் சினம் கொண்டு மறவரை அழிக்கும் தன்மையை அது இயம்புகிறது:

*செல்சமம் தொலைத்த வினைநவில் யானை*

*கடாஅம் வார்ந்து கடுஞ்சினம் பொங்கி*

**- பதிற்றுப்பத்து, பாடல் 82**

பலவகைக் கொடிகள் அசைந்தாடும் போர்க்களத்தில் பகைவர் மேற்கொண்ட பல போர்களையும் அழித்து வெற்றி பெற்ற, போர்த்தொழிலில் நன்கு பயின்ற யானைகள் மதநீர் பெருகி மிகுந்த சினத்துடன் விளங்கின.

***9.2 குதிரைப்படை மற்றும் தேர்ப்படை***

மாவள நாட்டுக் குதிரைகள் அஞ்சாத வீரம் உடையவை; தாமரை மலர் போன்ற நிறமும் வெண்நிற குழம்பும் உடையவை. சிந்து நதிக்கரையில் வாழும் குதிரைகள் பறையொலி போல முழங்கும். பாரசீக, பல்லவ நாட்டில் பிறந்த குதிரைகள் பழுப்பு நிறமுடையனவாய்ப் பாய்ந்து செல்லும் திறன் கொண்டவை; மராட்டிய நாட்டுக் குதிரைகள் மயில் கழுத்தைப் போன்ற நிறமுடையவை; மரக்கலன்களில் வந்த குதிரைகள் பச்சை நிறமுடையவை என்று பலவண்ணக் குதிரைகள் இருந்தமையைச் சீவக சிந்தாமணி இயம்புகின்றது:

*எஃகுப்படை அறுத்த கொய்ச்சுவற் புரவியொடு*

*மைந்துடை யார் எயில் புடைபட வளைஇ*

**- பதிற்றுப்பத்து, பாடல் 62**

போரில் பகைவரின் ஆயுதப் படைகளை வென்று, போருக்குப் பயிற்சி பெற்ற குதிரைகளுடன் வலிமையான பகைவரின் அரணைச் சுற்றி முற்றுகையிட்டு வெற்றி பெற்ற சேர மன்னனின் போர்த்திறமையை இப்பாடல் விளக்குகிறது. படையில் யானைகளும் குதிரைகளும் வேகமாகச் செல்ல, தேர்கள் போர்க்களத்தில் நிலைக்கேற்ப விரைந்து செல்லும் காட்சியை பதிற்றுப்பத்து பின்வருமாறு சித்திரிக்கிறது:

*களிறு பரந்து இயலக் கடுமா தாங்க*

*ஒளிரு கொடி நுடங்கத் தேர் திரிந்து கொட்ப*

**- பதிற்றுப்பத்து, பாடல் 48, அடி 4-5**

இரவலர்க்குத் தேரும் மாவும் வழங்கும் நிலைக்கு மேலாக, முல்லைக் கொடிக்குத் தேரைக் கொடுத்த பாரி மன்னனின் கொடையையும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. தேரைச் செலுத்தும் தொழிலமைந்த வீரரைச் 'சான்றோர்' எனக் குறிப்பது மரபு.

### *9.3 போர் நிமித்தம்*

போர்த்திறனும் மறவர் வலிமையும் வெற்றியை உறுதி செய்கின்றன. மேலும் போர்க்களத்தில் மன்னர்கள் தாம் பெற்ற வெற்றியின் களிப்பால் ஆடிப் பாடினர்:

*கழித்துவாள் அமலை ஆடிக் காட்டுவார் கண்கள் செந்தீ*

*விழித்துமேற் சென்ற வேழம் வேலினால் விலக்கி நிற்பார்*

**- சீவக சிந்தாமணி, காந்தருவதத்தை இலம்பகம், பாடல் 783 (அடி 1-2)**

வீரர்கள் உறையிலிருந்து வாளை உருவி எடுத்துச் சுழற்றிக் கூத்தாடிக் காட்டுவர்; நெருப்பென விழித்து எதிர்த்து வந்த யானையை வேலால் தடுத்து நிறுத்துவர். தேர்க் கயிற்றை வாளால் அறுத்து குதிரைகளை விரட்டி விட்டு, பாகனை நோக்கிக் குற்றமற்ற குதிரைகளைக் கொண்டு பூட்டுமாறு பணித்தனர். கோவிந்த மன்னன் தன் பட்டத்து யானையாகிய ஐராவதத்தின் மீது ஏறிச் சென்றான். சங்குகள் முழங்கின, முரசுகள் அதிர்ந்தன; சீவகன் அப்போது சிங்கம் போலக் காட்சி அளித்தான்.

## 10. சீவகனின் வீர நிலைகள்

நகரத்தின் எல்லையில் கோவிந்தன் தன் மகள் இலக்கணையின் திருமணத்திற்காக ஒரு சுயம்வர ஏற்பாட்டைச் செய்தான். உச்சியில் சுழலும் திரிப்பன்றி பொறி பொருத்தப்பட்ட பெரிய சக்கரம் ஒன்று கீழே சுழன்று கொண்டிருந்தது. அச்சக்கரத்தில் ஏறிச் சுழலும் பொழுதே தன்னைச் சரிசெய்துகொண்டு குறிபார்த்து அம்பு எய்ய வேண்டும்; அவ்வாறு திரிப்பன்றியை வீழ்த்துபவருக்குத் தன் மகள் இலக்கணையை மணம் முடித்துத் தருவதாக அவன் அறிவித்தான். பல மன்னர்கள் முயன்றும் அம்பு

தொடுத்து அப்பன்றியை எய்த முடியவில்லை. அப்போது சீவகன் யானை மேலிருந்து இறங்கி வெளிப்பட்டான். கட்டியங்காரன் இதைக் கண்டு புலியைக் கண்ட மான் போல் அஞ்சிக் கலக்கமுற்றான். சீவகன் இயந்திரத்தில் உள்ள சக்கரத்தின்மேல் ஏறி நின்று வில்லை வளைத்து அம்பு தொடுத்துப் பன்றியை வீழ்த்தினான். கோவிந்தன் சீவகனின் உண்மை வரலாற்றை அறிந்து, தன் மகள் இலக்கணையை அவனுக்கு மணம் முடித்துக் கொடுத்தான்.

*பெருங்களத் தாடவர் பொருவில் பைந்தலை*
*அரும்பெறற் கண்ணியொடு அற்று வீழ்வன*
*கருங்கனிப் பெண்ணையங் கானங் கால்பொர*
*இருங்கனி சொரிவன போன்ற என்பவே*

**- சீவக சிந்தாமணி, மண்மகள் இலம்பகம், பாடல் 2227**

கட்டியங்காரனுக்கும் சீவகனுக்கும் இடையே கடும்போர் நடைபெற்றது. தலைகள் உருண்டன; பிணமலையிலிருந்து குருதியாறு பெருக்கெடுத்து ஓடியது. போர்க்களத்தில் வீரர்களின் கருந்தலைகள் தும்பை மாலைகளுடன் அற்று வீழ்ந்த காட்சி, பெருங்காற்றால் பனந்தோப்பில் பனங்கனிகள் உதிர்வதைப் போன்றிருந்தது என இப்பாடல் உவமிக்கிறது.

### 10.1 போரின் உச்ச நிலை

போர்க்களத்தைத் தாமரைப் பொய்கையாகவும், புலால் நாற்றம் பொருந்திய வாள்படையைத் தாமரையின் புற இதழாகவும், யானைப்படையைப் புல்லிதழாகவும், கட்டியங்காரனுக்குத் துணை வந்த அரசர்களை அக இதழாகவும், அவனுடைய மக்களை அல்லிதழாகவும், கட்டியங்காரனையே பொகுட்டாகவும் அமைத்துக் கொண்ட தாமரை வியூகத்தைச் சீவகனாகிய தூய வண்டு முறையாக உண்டு சென்று கட்டியங்காரனின் கோட்டை மீது பறந்தது என்று சிந்தாமணி சித்திரிக்கிறது:

*பொய்கை போர்க்களம், புறவிதழ் புலவு வாட்படை, புல்லிதழ்*
*ஐய கொல் களிறு, அகவிதழ் அரசர், அல்லிதழ் மக்களா*
*மையில் கொட்டையம் மன்னா, மலர்ந்த தாமரை வரிசையால்*
*பைய உண்டபின் கொட்டைமேற் பவித்திரத் தும்பி புறத்தே*

**- சீவக சிந்தாமணி, மண்மகள் இலம்பகம், பாடல் 2311**

சீவகன் பல்வேறு படைகளையும் வென்று, கட்டியங்காரனின் மக்களைக் கொன்று, இறுதியாகக் கட்டியங்காரன் மீது சீறிப்பாய்ந்தான். கட்டியங்காரனது மார்பில் கதிரவனை ஒத்த சீவகன் ஏவிய அம்பு பாய்ந்தது; அவனது ஆவி நீங்கியது. கண்டோர் அஞ்சி நடுங்க, மேகம் நிறைந்த வானிலிருந்து திங்கள் வீழ்வது போல யானை மீதிருந்து கட்டியங்காரன் கீழே வீழ்ந்தான். சீவகன் நாட்டைக் கைப்பற்றி ஆட்சி புரிந்தான்.




*படம் 3: சீவக சிந்தாமணியில் சீவகனின் போர்க்கல நிகழ்வுகளின் காலவரிசை*

## தொகுப்புரை

- வீரயுகத்தின் மூச்சுக்காற்று சீவக சிந்தாமணியில் வீசுவதைக் காண்கிறோம். சீவகன் தன் ஆண்மையையும் ஆற்றலையும் நிறுவிக் காவியத் தலைவனாக விளங்கினான்.
- நந்தகோனின் வேண்டுகோளால் ஆநிரைகளை மீட்டு, வேடர்களைக் கொல்லாது அம்பு முனையில் அடக்கியவனாகச் சீவகன் திகழ்கின்றான்.
- சச்சந்தன் விண்ணுலகம் சென்று அங்குள்ளோர்க்கு மன்னனாகட்டும்; பூமி எங்கும் பொன் கொழிக்க நானே உலகத்தை ஆட்சி செய்வேன் என்றான் கட்டியங்காரன்.
- சுயம்வரப் போரில் திரிப்பன்றியைச் சீவகன் வீழ்த்தி, பின்னர் இறுதிப் போரில் கட்டியங்காரனை வீழ்த்தி அவனுடைய படைகளையும் ஒறுத்துப் போர்க்கலையின் மணிமகுடமாகக் காட்சியளிக்கின்றான்.
- போர்க்களத்தைத் தாமரைப் பொய்கையாகவும் நான்குவகைப் படைகளை மலரின் பல்வேறு பகுதிகளாகவும் உருவகித்துச் சித்திரிக்கும் தாமரை வியூகக் காட்சி, சிந்தாமணியின் கவிதா நயத்திற்குச் சான்றாக அமைகிறது.
- வெட்சி, வஞ்சி, நொச்சி, தும்பை என்னும் தொல்காப்பியப் போர்த்திணை மரபுகள் சிந்தாமணியில் புதிய திருப்பங்களுடன் இணைந்து, சங்க கால மற்றும் காப்பியகால போர்மரபுகளுக்கு இடையேயான தொடர்ச்சியை வெளிப்படுத்துகின்றன.

## ஆதார நூற்பட்டியல் (Works Cited - MLA பாணி)

[1.] நச்சினார்க்கினியர். சீவக சிந்தாமணி மூலமும் உரையும். இளங்கனி பதிப்பகம், 2009.
[2.] இளம்பூரணர். தொல்காப்பியம் - பொருளதிகாரம். 6வது பதிப்பு, சாரதா பதிப்பகம், 2008.
[3.] இளங்குமரன். புறநானூறு. கோவிலூர் மடாலயம், 2003.

[4.] ஔவை துரைசாமிப் பிள்ளை, சு. பதிற்றுப்பத்து மூலமும் விளக்க உரையும். தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1950.

[5.] செயபால், இரா. அகநானூறு. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர்.

[6.] கந்தசாமி, சோ. ந. புறத்திணை வாழ்வியல். தமிழ்ப் பல்கலைக்கழகம், 1994.

[7.] பழனிசாமி, செ. புறநானூற்றில் தமிழ் பண்பாடு. வாணி பதிப்பகம், 1959.

[8.] சுப்புரெட்டியார், ந. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை. ஐந்திணை பதிப்பகம், 1958.

[9.] வேங்கடசாமி நாட்டார், ந. மு. இனியவை நாற்பது மூலமும் உரையும். சாரதா பதிப்பகம், 2005.

**ஆசிரியர் அறிவிப்பு — நலன் முரண்பாடு பற்றிய கூற்று**

இக்கட்டுரையின் ஆசிரியர், இவ்வாய்வுக் கட்டுரையின் எழுத்துப்பணி தொடர்பாக எவ்வித நிதிசார், தனிப்பட்ட அல்லது தொழில்முறை நலன் முரண்பாடும் இல்லை என உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறார். இக்கட்டுரையானது முற்றிலும் கல்விசார் மற்றும் ஆய்வு நோக்கத்திற்காக மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது; இதற்கு எவ்வித நிதி உதவியோ, நிறுவன ஆதரவோ பெறப்படவில்லை. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து மூலநூல் மேற்கோள்களும், இணையவழி ஆதாரங்களும் அறிவுசார் நேர்மையுடன், உரிய சான்றுடன் இணைக்கப்பட்டுள்ளன.

KALANJIYAM